# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.08.2019ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1.. | நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளை தனியார் ஆட்களைக் கொண்டு தூய்மைப்படுத்துவதற்கு 30.07.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு (Bright Advertising) நிறுவனத்திடமிருந்து பட்டியல் எண்.7051, நாள்.18.07.2019ல் தொகை ரூ.9082/-ஐ பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.9082/-ஐ (Bright Advertising) நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4008/2017/இ1 |
| 2. | இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட சொத்துவரி தொடர்பான வழக்கிற்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No 23389, 23391, 23393, 23414, 23415, 23419, 23424, 23425, 23376 மற்றும் 23381/2019 திரு.V.ஜெயப்பிரகாஷ் நாராயணன் வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்திடவும் அவ்வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2758/2019/அ2 |
| 3.. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்கத் தேவையான குளோரின் வாயுசிலிண்டர்கள் வைப்பதற்கும், சிலிண்டர் ஆய்வு செய்யவும் 24.07.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 08.08.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் 32A, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம் | ரூ.4,00,000/- | 3,96,724/- |
| 2 | M/s.ஜெனரல்மார்க்கெட்டிங் எண்டர்பிரைசஸ், 25, பெரியபள்ளி வாசல் தெரு, பழனி | ரூ.4,00,000/- | 4,08,305/- |

**அலுவலகக் குறிப்பு** :

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்கள் அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.02562/2019/அ5

4 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டி அருகில் தேசிய நெடுஞ்சாலையில் புதியதாக வால்வு பொருத்தியதற்கு வால்வு பிட்டுகள் கட்ட 24.07.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 08.08.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. G.K.S.சேதுபதி, 3/222, கிட்டாம்பாளையம், காரமடை | ரூ.3,00,000/- | 0.12% அதிகம் |
| 2 | M. வேலுச்சாமி, 6 EB காலனி, மேட்டுப்பாளையம் | ரூ.3,00,000/- | 0.01% குறைவு |

**அலுவலகக் குறிப்பு**

மேலே பெறப்பட்டஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்க குடிநீர் அவசர அவசியம் கருதி நெடுஞ்சாலைத்துறை பணிகள் தடைபடாமல் இருக்க தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2563/2019/அ5

5 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டி அருகில் காரமடை பிரஸ்காலனிக்கு செல்லும் பம்பிங் மெயின் நெடுஞ்சாலைத்துறையால் (N.H) விரிவாக்கப்பணி நடைபெறுவதால் பம்பிங் மெயின் உடைக்கப்பட்டு தண்ணீர் செல்வதில்லை. ஆதலால் அங்கு செல்லும் தண்ணீரை கே.கே.நகர் பகுதிகளுக்கு மாற்றும் பொருட்டு காரமடை பம்பிங் மெயினிலிருந்து கே.கே.நகர் பம்பிங் மெயினுக்கு இண்டர்லிங் செய்ய அதற்கு தேவையான பைப்புகள், வால்வுகள் மற்றும் தேவையான சாமான்கள் வாங்கி மாற்றவும், கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டியில் பழுதான வால்வுகள், பைப்புகள் மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,60,000/-க்கு குடிநீர் அவசரம் அவசியம் கருதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிமேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   ந.க.எண்.2969/2019/அ5

6. மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த் திட்டங்களிலும் தண்ணீரில் உள்ள அழுக்கினை நீக்க (Turbidity) படிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த வாரம் பெய்த மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தண்ணீர் கூடுதலாக செல்கிறது. ஆற்றில் தண்ணீர் செம்மண் கலந்து விடுவதால் அழுக்கினை நீக்க படிகாரம் கூடுதலாக தேவைப்படுவதாலும் தற்போது கையிருப்பில் குறைவாக இருப்பதாலும் 20 டன் படிகாரம் (Sulfate of Alumina Ferric) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய (TWAD BOARD) விலைப்பட்டியல் படி வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு படிகாரம் தேவைப்படுவதால் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2693/2019/அ5

| | |
|---|---|
| 7 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32050/2016/ஜே2,நாள்.26.10.2017ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரையின்படி மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2019-20 ன் கீழ் மேட்டுப்பாளையம் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் மற்றும் பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்தல் பணிக்கு ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் 30.07.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டவாறு<br>மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் நேரிடையாக அலுவலகத்தில் பெறப்பட்டது. (மின்னஞ்சல் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை.<br>1. M/s. First Choice Outsourcing ServiceS. Trichy<br>2. M/s. S.S. Engineers, Coimbatore<br>3. M/s.AR ES PE INFRA Private Ltd, Coimbatore<br><br>வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் இரு உறைகளில் (Technical Bid, Price Bid) கூர்ந்தாய்வுக் குழுவினர்கள் முன்னிலையில் 05.08.2019ல் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழிற்நுட்ப தகுதி உறையினை மற்றும் (Technical Paid) பிரித்து கூர்ந்தாய்வுசெய்யப்பட்டது.<br><br>மேற்படி வ.எண்.(2) M/s. S.S. Engineers , கோவை அவர்களின் தொழிற்நுட்ப உறை தகுதி பெற்றது. வ.எண்.(1) M/s. First Choice Outsourcing Services. Trichy மற்றும் வ.எண்.(3) M/s.AR ES PE INFRA Private Ltd, Coimbatore அவர்களின் உறை தகுதி பெறவில்லை<br><br>இப்பணிக்கு தொழிற்நுட்ப உறை தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் M/s. S.S. Engineers ,கோவை அவர்கட்கு விலைப்புள்ளி உறையினை பிரிக்க 05.08.2019ல் கடிதம் வாயிலாக தகவல் அனுப்பப்பட்டது.<br><br>08.08.2019 அன்று Price Bid ஐ . S.S. Engineers மற்றும் கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டது. இவ்வொப்பந்தப்புள்ளி ரூ.2.86% மதிப்பீட்டிற்கு அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது.<br><br>இதனால் 13.08.2019 அன்று கலந்தாய்வு கூட்டத்திற்கு திருவாளர் S.S. Engineers அவர்களை மதிப்பீட்டு விலைப்புள்ளிகளை கு.றைத்து கொடுக்கும்படி கேட்டதன் அடிப்படையில் திருவாளர்.S.S. Engineers கோவை அவர்கள் விலைப்புள்ளியினை 0.11% (ரூ.1782960/-) மதிப்பீட்டிற்கு குறைவாக கொடுத்துள்ளார்கள்.<br><br>எனவே, பள்ளிக்குழந்தைகளின் நலன் மற்றும் பள்ளி வளாகத்தில் சுகாதாரம் கருதி இவ்வொப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டியும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி கடிதம் (Letter of Acceptance) அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 8 | இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள கழிப்பறையினை இமயம் சமூக நல அறக்கட்டளை 26,7th கிராஸ் ரத்தினபுரி கோவை, 27 என்ற அமைப்பின் சார்பாக மராமத்து பணிகளை செய்து தர கடிதம் அளித்துள்ளனர். இக்கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. . எனவே, இப்பணியினை CSR நிதியின் மூலம் நல்ல முறையில் மேற்கொள்ளவும் நகராட்சி கட்டிடத்திற்கு எவ்வித சேதமும் இல்லாமல் பணியினை மேற்கொள்ளவும் பணிமுடிந்த பின்பு எவ்வித உரிமையும் கோரக் கூடாது என்கிற நிபந்தனையுடன் உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2998/2019/இ1 |

| | |
|---|---|
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலைத் தொட்டியில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங்மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும், பொதுக் குழாய் மற்றும் பொதுக்கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச்சாமன்கள் விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஓப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>ந.க.எண் 3051/2019/அ5 |
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த்திட்டங்களிலும் பவானி ஆற்றை நீர் ஆதாரமாக கொண்டு ராவாட்டர் (Raw Water) சுத்தம் செய்யப்பட்டு சுத்த நீராக (Clear Water) மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று திட்டங்களிலும் கடந்த வாரம் கோவையில் பெய்த அடைமழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தலைமை நீரேற்று நிலைய நீர் உறிஞ்சு கிணறு மற்றும் திறந்த வெளி கால்வாயில் சேறுகள் (படிமம்) படிந்து நீரேற்றம் தடைபட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் சேறுகள் அகற்ற வேண்டியது. அவசியமாகிறது<br>1. New Water Supply Intake Channel<br>2. New Water Supply Scheme Clarifloculator<br>3. Combined Scheme Collection Well<br>4. Combined Scheme Clarifloculator<br>5. Old Scheme Settling Tank<br>6. Old Scheme Open Well<br><br>மேற்கண்ட இடங்களில் சேறுகள் அகற்றவும், தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர்திட்டத்தில் நீரேற்றம் செய்யும் குடிநீரின் அளவை அளவிட புதிதாக(Flow Meter) அளவு மானி வாங்கி மாற்றவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலைப்பட்டியல் படி ஆகும் செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு சேறுகள் அகற்ற வேண்டியது அவசியமாவதால் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஓப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.3052/2019/அ5 |
| 11. | மேட்டுப்பாளையம் நகராட்சி புதிய அலுவலகத்தில் மேலாளர் அறையினை மாற்றி அமைத்தல் பணி, வருவாய் பிரிவினருக்கு புதியதாக தடுப்புகள் அமைக்கும் பணி, நகராட்சி அலுவலகத்தில் அதிக அளவில் பொதுமக்கள் கூடுவதால் கூடுதலாக ஒரு குடிநீர் சுத்திகரிப்பு கருவி நிறுவும் பணிகள் மற்றும் சில மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4,00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| 12. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களில் குடிநீர்கட்டணம் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக் கோரி அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கும் சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2269/2019/அ2 |

13 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 201 –ன் கீழ் 21.08.2019ம் தேதியன்று கீழ்க்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கும் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 22 போரையா கவுடர் தெரு அருகில் டேன் இந்தியா சாலையில் உள்ள சிறுபாலம் மராமத்து பணி செய்தல் | 1.00 | சி.நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 1.58% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.9 மகாதேவபுரம் இராமசாமி பிள்ளை தெரு நியாயவிலைக்கடை அருகில் உள்ள சிறுபாலம் மராமத்து பணி செய்தல் | 1.70 | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 2.73% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண்.9 மகாதேவபுரம் குறுக்கு சாலையில் உள்ள சிறுபாலம் மராமத்து பணி செய்தல் | 2.00 | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 2.23% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | வார்டு எண் 8ல் உள்ள கூடுதல் ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்திற்கு புதியதாக சுற்றுச்சுவர் கட்டுதல் | 3.50 | சி.நாகராஜ் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 2.13% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்த்தாரர்களில் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

14 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019-20 மற்றும் கல்வி நிதி 2019-20ன் கீழ் 21.08.2019ம் தேதியன்று கீழ்க்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | கல்வி நிதி 2019-20 வார்டு எண்.5 வள்ளுவர் நகரவை துவக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் | 9.90 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 1.78% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.4 சங்கர் நகர் பகவான் மஹாவீர் நகரவை உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் கழிவறைகள் கட்டுதல் | 3.80 | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 1.41% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | பொது நிதி 2019-20 வார்டு எண்.5ல் பிள்ளையார் கோவில் வீதியில் காவலர் குடியிருப்பு பின்புறம் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.90 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 0.10% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 1.31% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | வார்டு எண்.17ல் குமரபுரம் பகுதியில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.70 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரசன்ஸ் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 1.13% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

15 இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து கடைநிலை ஊழியர்களுக்கு 2019-2020 ஆண்டுக்கான சீருடைகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இச்சீருடைகள் மற்றும் அதனை தைப்பதற்கான தையற்கூலி ஆகியவற்றினை வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட சீருடையினை இந்திய அரசு நிறுவனமான National Textile Corporation Limited Coimbatore என்ற நிறுவனத்தில் வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.3181/2019/எச்1

<table>
<tr>
<td>16</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளிலும் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை இனங்களில் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை செலுத்தக்கோரி அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கும் சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரம் செய்ய கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>பெயர்</th><th>நாள்</th></tr>
<tr><td>1</td><td>முகம்மது அப்பாஸ்<br>54/58 எல்.எஸ்.புரம்<br>1வது வீதி, மேட்டுப்பாளையம்</td><td>2200</td></tr>
<tr><td>2</td><td>சி.நடராஜன்<br>26/74<br>மஜித் வீதி, மேட்டுப்பாளையம்</td><td>2000</td></tr>
<tr><td>3</td><td>முருகேசன்<br>18, பாரதியார் சந்து,<br>மேட்டுப்பாளையம்</td><td>2100</td></tr>
</table>
<br>
மேற்கண்டவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.சி.நடராஜன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2269/2019/அ2</td>
</tr>
<tr>
<td>17</td>
<td>இந்நகராட்சியின் 2018-2019ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.2201/2018/அ3</td>
</tr>
<tr>
<td>18</td>
<td>மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின் ஆக்கி (Generator) 20.03.2018 ஆம் தேதியில் பொருத்தப்பட்டது. மின் ஆக்கியினை பரிசோதித்து 22.03.2019 ஆம் தேதி முதல் இயக்கப்பட்டு வருகிறது. மேற்காண் பரிசோதனையில் மின் ஆக்கியில் (New Engine Performance Inspection) ஆயில் மற்றும பில்டர்கள் மாற்றி பராமரிக்கப்பட வேண்டுமென ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளதற்கிணங்க இப்பணியினை மேற்கொள்ள Manirajan Diesel Sales and Service (P) LTD நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் அதற்கான செலவு தொகை ரூ.8048/-ஐ இந்நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.2527/2019/இ1</td>
</tr>
<tr>
<td>19</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2019–2020ம் ஆண்டுக்கான பள்ளி கழிவறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுச் சுகாதார அவசர அவசியத்தையும் பள்ளி மாணவ மாணவிகளின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு 06.08.2019 வரை முடிவடையும் பணி உத்திரவினை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்தும், தற்போது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்த்த தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்</td>
</tr>
</table>